# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2003, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 9.25** | **தபாற் செலவு : ரூபா 4.50**

## 2003 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

ச.வ– ஓ. 49/2002

*[2003 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

## இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட உறுப்புரைகளுக்கிணங்க, உசாத்துணைப் பொறியியல் உயர்தொழிலின் பொது முன்னேற்றத்துக்காகவும், அதன் குறிக்கோள்களைப் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காகவும் இதற்குமுன் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட வேண்டும் என விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உசாத்துணைப் பொறியியலாளர் கழகத்தின் உறுப்பினர்களாக தற்போதுள்ளவர்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தனையாட்களும் "இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர்கள் கழகம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட இலங்கை உசாத்துணைப் பொறியியலாளர் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

(இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்டதொரு குழுவின் உறுப்பினர்களாகவிருத்தலும் வருதலும் வேண்டும் என்பதுடன் அப் பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் ; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும், முழுத்தத்துவமும் அதிகாரமும் இருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) உசாத்துணைப் பொறியியல் உயர்தொழிலைப் பேணிக்காத்தலும் ஊக்குவித்தலும் ;

(ஆ) உசாத்துணைப் பொறியியலாளர்களின் உயர்தொழில் சார் அக்கறைகளையும், உரிமைகளையும், தத்துவங்களையும், சிறப்புரிமைகளையும் ஊக்குவித்தலும் பாதுகாத்தலும் ;

(இ) பொறியியல்துறையை நேரடியாக அல்லது மறைமுகமாகப் பாதிக்கும் விடயங்கள் பற்றி உசாத்துணைப் பொறியியலாளர்களுடன் உரையாடுவதற்கும் அதன் கருத்துக்களை ஆய்ந்தறிவதற்குமென அரசாங்கத்திற்கும் அதன் துணைநிலை நிறுவனங்களுக்கும் ஏனையோருக்கும் களம் ஒன்றை அமைத்துக் கொடுத்தல் ;

(ஈ) இலங்கையில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் ஏனைய பொறியியல் கருத்திட்டங்களுக்கும் உசாத்துணை சேவைகளை வழங்கும் நோக்கங்களுக்காக உறுப்பினர்களிடையே கூட்டுத் தொழில்முயற்சிகளுக்கு வசதியளித்தலும் அத்தகைய கருத்திட்டங்களுக்கு நன்கொடையாளர்களிடமிருந்து நிதியுதவி பெற்றுக்கொடுத்தலும் ;

(உ) உற்பத்தியாளர்களையும், ஒப்பந்தக்காரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கழகங்களுடனும் பொறியியற் பணிகளில் ஈடுபட்டுள்ள ஏனைய ஆட்களுடனும் பொது அக்கறை கொண்ட விடயங்கள் பற்றி உரையாடுதல் ;

(ஊ) உசாத்துணைப் பொறியியலாளர்களுக்கு உயர் தொழில்சார் நடத்தையும் வழக்காறும் சார்ந்த பொருத்த தராதரங்களை அறிமுகஞ்செய்தலும் அவர்களது உயர்தொழில்சார் நடவடிக்கைகளில் அத்தகைய தராதரங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்துதலும் ;

(எ) இலங்கையினுள், உசாத்துணைப் பொறியியலாளர்களுக்கு கட்டண அளவுத் திட்டங்களையும், தொழிலுக்கமர்த்தும் நிபந்தனைகளையும் தீர்மானித்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றுள் எதனையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அரசாங்கத்துடனும் அதன் துணை நிறுவனங்களுடனும் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதலும் உயர்தொழில்சார் கழகமொன்றுக்குத் தோதான அத்தகைய உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் ஊக்குவித்தலும் ;

(ஐ) ஏனைய நாடுகளிலுள்ள உசாத்துணைப் பொறியியலாளர் கழகங்களுடன் இணைப்பை ஏற்படுத்துதலும் சர்வதேச உசாத்துணைப் பொறியியல் ஒழுங்கமைப்புகளுடன் ஒன்றிணைதலும் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு அவசியமானவாறான வேறு ஏதேனும் வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களையுடையதாதல் வேண்டும் :—

(அ) நிதிகளைத் திரட்டவும், காசாகவோ அல்லது பொருளாகவோ, மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறவும், ஒப்பந்தங்களைப் புரிந்து கேட்கவும் ;

(ஆ) ஏதேனும், அசையுள்ள அல்லது அசையற்ற ஆதனத்தை எத்தகையதுமான ஏதேனும் முறையில் கொள்ளவும், வைத்திருக்கவும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும் அல்லது கொடுக்கவும், விற்பனை செய்யவும் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவும், கூட்டுத்தாபனத்தின் அலுவலுக்கு அவசியமான அல்லது செளகரியமான ஏதேனும் கட்டிடத்தை நிர்மாணிக்கவும் பேணவும், மாற்றவும் ;

(இ) வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கவும், தொழிற்படுத்தவும், மூடவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி கடன்பெறவும் அல்லது பணம் திரட்டவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை 5ஆம் பிரிவின்கீழ் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளும் பேரவை பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்யவும் ;

(உ) எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தால் அளிக்கப்படும் சேவைகளுக்கு கட்டணங்கள் அறிவிடுவதற்கும் ;

(எ) ஆளொருவரை கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக மீளவும் அனுமதிப்பதற்கு கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தை அறவிடுவதற்கும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும் தொழிலுக்கமர்த்துவதற்கும், பதவி நீக்கம் செய்வதற்கும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் செலுத்துவதற்கும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

5. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவமும், கட்டுப்பாடும், நிருவாகமும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய, பதவிதாங்குநர்களையும் அவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட ஆளும் பேரவை ஒன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் கழகத்தின் பேரவை உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*உறுப்பினர்களின் இடாப்பு.*

6. பேரவை உறுப்பினர்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று கழகத்தின் உறுப்பினராக இருக்கும் ஆளொவ்வொருவரினதும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக முறையாக சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வோர் ஆளினதும் பெயர் எழுதப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

7. (1) காலத்துக்குக்காலம், ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் மூன்றில் இரண்டிற்குக் குறையாத உறுப்பினர்களின் வாக்குகளைக் கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும்

இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததவையாயிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையின் வகுப்புக்கள், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள், உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல், விலக்குதல் அல்லது பதவி துறத்தல் ;

(ஆ) பேரவையைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவி விலகல், பதவியிலிருந்து அகற்றப்படுதல், பதவியை வறிதாக்கல் பேரவையின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும், சேவையாளர்களினதும் தத்துவங்கள், கடமைகள், பணிகள், அவர்களின் நியமனம், பதவிநீக்கம், பதவியை முடிவுறுத்துதல் ;

(ஈ) பேரவையினதும் கூட்டுத்தாபனத்தினதும் அதன் ஏதேனும் உபகுழுவினதும் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் நடாத்துதல் தொடர்பான நடவடிக்கை முறையும் அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் உட்பட ;

(உ) கூட்டுத்தாபனத்திலும் பேரவையிலும் உறுப்பாண்மைக்கான தகைமையும் தகைமையீனமும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள கழகத்தின் அமைப்பு அகவிதிகள், அவை சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்

ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத அளவுக்கு, கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதி ஒன்றைப்போல அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

8. கூட்டுத்தாபனத்தினால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனமும் இச்சட்டத்தின்கீழ் அல்லது விதிகளின்கீழ் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும், பயன்படுத்தப்படுதலும், பிரயோகிக்கப்படுதலும் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் ஆதனம்.

9. (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டிலும், குறைந்தபட்சம் ஒருதடவையாவது பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

10. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான கழகத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் அல்லது கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று கழகத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவான எல்லா ஒப்பப்பணங்களும் கட்டணங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். கழகத்தினால் செலுத்தப்படற்பாலனவும், கழகத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

குழுக்களின் நியமனம்.

11. கூட்டுத்தாபனமானது அதன் உறுப்பினர்களிடையே உயர்தொழில்சார் தராதரத்தையும் ஒழுக்கத்தையும் பேணுவதற்காக, காலத்துக்குக்காலம் ஏதேனும் குழுவை நியமிப்பதற்கும் அவசியமெனக் காணப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

12. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, செயலாளரினதும் அல்லது பேரவையால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறான பேரவை உறுப்பினர் ஒருவரினதும் பேரவையின் இன்னோர் உறுப்பினரினதும் முன்னிலையிலன்றி, எத்தன்மையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக சாதனத்தில் தங்களது பெயர்களை ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

13. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக அவரால் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலதான ஆண்டு ஒப்பப்பணத்தின் தொகையை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

14. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும் அவர்கள்மூலம், அவர்களில் இருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருகின்றவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமை களையேனும்,. பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

15. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.